**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 200/மா/2022**

**நாள்: 23.01.2023**

திரு. இரா.மயில்சாமி, புதுவிளாங்குடி,
மதுரை – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர், மண்டலம் 03(மத்தியம்)
மதுரை மாநகராட்சி, மதுரை – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5 என்ற முகவரியில் வசிக்கும் திரு. இரா.மயில்சாமி என்பவரின் 10.10.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.10.2022–ல் பெறப்பட்டு, 200/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5 என்ற முகவரியில் வசிக்கும் திரு. இரா.மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 10.10.2022 நாளிட்ட தனது மனுவில் :

மதுரை மாநகராட்சி வார்டு எண்.75, மண்டலம்–03 (மத்தியம்) 70 திருப்பரங்குன்றம் ரோடு (ரத்தினாபுரம் AA ரோடு) மதுரை–11 கதவு எண் கொண்ட இடத்தில் (1) N.N.நல்லமணி கோனார் (லேட்) (2) N. இராஜாமணி (லேட்) (3) N. இராஜேந்திரன் (4) நடராஜன்(லேட்) (5) N.காந்தி (எ) நல்லமணி (6) N. மணிமாறன் (7) R.பாமா (8) R. லதா போன்ற நபர்கள் குடும்ப உறுப்பினர்கள் கூட்டாக அனுபவித்து வரக்கூடிய இடம், நகர சர்வே எண்கள் T.S. No.2001/2 – 2005/6 மற்றும் இதர புல எண்களில் மொத்த பரப்பளவு 84,860 சதுர அடியாகும். இவ்விடமானது 1920ம் வருட ஆவணங்களில் அருள்மிகு கூடலழகர் பெருமாள் கோவிலுக்கு சொந்தமான இடமாக இருந்து

வந்ததாக தெரிய வருகிறது. இந்த இடத்திற்கு பட்டா இல்லை. மூல ஆவணங்களும் இல்லை. மேற்படி இடத்தில் முப்பது பேருந்துகளுக்கு (Bus) மேல் இவ்விடத்தில் பணிமனையாக (workshop) செயல்பட்டு வருகிறது. பேருந்துகள்(Bus) பராமரிக்கும் பணிமனையாக உள்ளதால், தொழிற்சாலைகள் சட்டத்தின்படி உரிய அனுமதி பெறவில்லை. மாநகராட்சி மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தீயணைப்பு துறையிலும் முறையாக அனுமதி பெறவில்லை. மேலும் இப்போது இவ்விடத்தில் மாநகராட்சி மற்றும் நகர் ஊரமைப்புத்துறையிடம் அனுமதி பெறாமல் புதிய கட்டுமானம் நடைபெற்று வருகிறது. இக்கட்டுமான பணியை (stop work) உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும். இதற்கு ஆதாரமாக போட்டோ இணைத்துள்ளேன். மேலும் மேற்கண்ட இடமானது பொதுபயன்பாட்டு கட்டிடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் **1965** பிரிவு **2(8)**ன்படி (section 2(8) of the Tamil Nadu Public Buildings (Licensings) **1965**ன்படி முறையாக உரிமம் பெற்று முறைப்படி அவ்வப்போது புதுப்பிப்பது அவசியமாகும். ஆனால் இக்கட்டிடத்திற்கு உரிமம் ஏதும் பெறவில்லை. இக்கட்டிடம் பொது கட்டிடம் என்பதால் வட்டாட்சியரிடம் முறையாக அனுமதி பெறவில்லை. மேலும் பொது பயன்பாட்டிற்கான கட்டிடம் என்பதால் **1973**ம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம் பிரிவு**33**ன் படியும் (Commissioner of Town and Country Planning Roc.No.17694/2013/Spl.ce11) கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தின் (Directorate of Town and Country Planning ) ஒப்புதல் பெறவில்லை. எனவே சட்டத்திற்கு புறம்பாக மேற்படி இடத்தில் செயல்படும் நல்லமணி டிரான்ஸ்போர்ட் (Bus company) மற்றும் கல்லூரி பேருந்துகள் பராமரிக்கப்படும் பணிமனையை (workshop) தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம் **1971**ன் பிரிவுகள் **56** மற்றும் **57**ன் கீழ் பூட்டுதல் மற்றும் முத்திரையிடுதல் (lock and seal) மற்றும் அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும் இக்கட்டிடம், மற்றும் பணிமனை (workshop) முறையான அனுமதி உள்ளதா என்பதை கண்காணிக்க தவறிய மதுரை மாநகராட்சி முன்னாள், இந்நாள் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது கடுமையான துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும், மேற்படி இடமானது **84,860** சதுர அடிக்கு சாதாரண சொத்துவரி அளவீடை குறைத்து மிகமிக குறைவாக மனைபிரிவிற்கு உள்ளபடி வரிவிதித்தும், வணிகத்திற்கு (commercial) உள்ள வரி விதிக்காமலும், பஸ் கம்பெனியில் பணிபுரியும் **80** முதல் **90** நபர்கள் வரை பணிபுரியும் ஓட்டுநர்கள், நடத்துநர்கள், மெக்கானிக் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு தொழில் வரி இதுநாள் வரையிலும் வசூலிக்கப்படவில்லை. மேலும் ESI, PF போன்றவைகளும் செலுத்துவதில்லை. இதனால் மதுரை மாநகராட்சிக்கு பெருத்த வருவாய் இழப்பீடு ஏற்பட்டு வருகிறது. இனி சொத்துக்களுக்கு புதிய வரி விதிப்பின்படி தள ஆய்வு செய்து நான்கு பக்கமும் உள்ள சுற்று சுவருக்கு உட்பட்ட பகுதிகளில் முழுமையாக அளந்து வரி விதிக்கப்பட வேண்டும்.

எனவே இதற்கு காரணமாக முன்னாள், இந்நாள் மாநகராட்சி அலுவலர்களிடம் இருந்து இழப்பீடு வசூலிக்கப்பட்டு (recovery) மாநகராட்சி கணக்கில் வரவு வைத்து ஈடுசெய்ய உத்தரவிட்டும் இதில் பொறுப்பற்ற முறையில் உரிய வரி விதிக்காத மாநகராட்சி அலுவலர்கள் முன்னாள், இந்நாள் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறைரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறும் (இது குறித்து புகார் மனு **06.10.2022** தேதியில் பதிவு தபாலில் அனுப்பியுள்ளேன்) மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2.** இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை **05.01.2023** அன்று நாகர்கோவில் முகாமில் நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி **21.12.2022** நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**3.** மனுதாரர் **05.01.2023** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

மதுரை மாநகராட்சி, வார்டு எண்.75, மண்டலம்–3 (மையம்) 70, திருப்பரங்குன்றம் ரோடு நகர சர்வே எண்கள்.T.S.எண்.2001/2 –2005/6 மற்றும் இதர எண்களில் உள்ள **84,860** சதுர அடி இடம் **1920**ம் வருட ஆவணங்களின்படி அருள்மிகு கூடலழகர் பெருமாள் கோவிலுக்கு சொந்தமான இடம் என தெரிய வருகிறது. இந்த இடத்தை நல்லமணி பஸ் நிறுவனம் ஆக்கிரமிப்பு செய்து பஸ் கம்பெனி நடத்தி வருகிறது. மேற்கண்ட இடத்தில் சில கட்டடங்களும் உள்ளன. ஆனால் இவற்றிற்கு வரியை சாதாரண சொத்து வரியாக மாநகராட்சியினர் வசூல் செய்து வருகின்றனர். மேலும் இங்கு பணிபுரியும் பணியாளர்களிடமிருந்து தொழில் வரியும் மாநகராட்சியால் வசூல் செய்யப்படுவதில்லை. இதனால் மதுரை மாநகராட்சிக்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. மேற்கண்ட இடத்தில் மாநகராட்சியில் எவ்வித அனுமதியும் பெறாமல் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

எனவே, மேற்கண்ட இடத்தை முழுமையாக அளந்து வணிகத்திற்குண்டான சொத்துவரி மற்றும் தொழில்வரி விதித்திடவும் மேலும், இந்த இடத்தில் மாநகராட்சி அனுமதியின்றி பெரிய அளவில் கட்டுமானம் கட்டப்பட்டு வருவதை நிறுத்திடவும், ஒப்புதல் ஏதும் பெறாமல் கட்டடம் கட்டப்பட்டுள்ளதால் நகர் ஊரமைப்புச் சட்டம் 1973–ன் பிரிவுகள் 56 மற்றும் 57 ன் கீழ் பூட்டுதல் மற்றும் முத்திரையிடுதல் (Local and Seal) மற்றும் அமலாக்க நடவடிக்கை எடுக்கவும் ஆவன செய்யுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4) மதுரை மாநகராட்சியில் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி ஆணையர்(பொறுப்பு), உதவி செயற்பொறியாளர்(திட்டம்) ஆகியோர் **05.01.2023** அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர்:

மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தின் நகரளவை ஆவணங்களை ஆய்வு செய்ததில் மனுதாரர் குறிப்பிடும் நகரப்புல எண் **2001** என்பது **1933**ம் ஆண்டு நடைமுறையில் இருந்த வருவாய் நகரளவை ஆவணங்களின்படி சர்வே வார்டு IV பிளாக் 25, நகர் புல எண் **2001**ன் பரப்பளவு **1** ஏக்கர் **34848** சதுர அடி பட்டா எண் **478**ன்படி வெங்கடேஸ்வரா கோவில் நந்தவனம் என தாக்கலாகியுள்ளது. அதன் பின்னர் மதுரை வருவாய் கோட்டாட்சியரின் கொடை ஆணை எண் 25/56 நாள் **1.10.1956** மற்றும் TK 8A-74-66 நாள் **10.12.1956**ன்படி நகரப் புல எண் **200/1** பரப்பு **4096** சதுர அடி மதுரை முனிசிபல் கவுன்சில் எனவும், **2001/2** பரப்பு **1** ஏக்கர் **30,752** சதுர அடி லங்காரம் என்பவர் பெயரிலும் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் தற்போதைய வருவாய் ஆவணங்களின்படி சர்வே வார்டு IV பிளாக் **37** பரப்பளவு **6850** சதுர மீட்டர் லங்காரம் மற்றும் **8** நபர்களின் பெயர்களில் தாக்கலாகியுள்ளது எனவும், மேற்கண்ட இடம் உட்பிரிவு செய்யப்பட்டு பட்டாதாரர் பெயரிலேயே உள்ளது எனவும், மதுரை மாநகராட்சி பெயரில் தாக்கலாகவில்லை என்கின்ற விவரத்தை சமர்ப்பித்து, இது தொடர்பான ஆவணங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்.

மேலும், மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள பஸ் நிறுவனத்தில் பணியாற்றும் பணியாளர்களிடமிருந்து தொழில் வரியாக ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் **1250/–** வீதம் வசூல் செய்யப்பட்டு

வருகிறது என்கின்ற விவரத்தையும், மேலும் அவை குறைந்த அளவு வரியாக உள்ளதால் அதனை உயர்த்திட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் அங்கு நடைபெறும் அனுமதியில்லா கட்டுமானப் பணியை நிறுத்திடும் பொருட்டு கடந்த 1.10.2022 அன்று மாநகராட்சியால் நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

5) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி துணை ஆணையரின் (பொறுப்பு) அறிக்கை, மதுரை மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் ஆகியோரது வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் மதுரை மாநகராட்சி, வார்டு எண்.75, மண்டலம்–03(மத்தியம்), 70, திருப்பரங்குன்றம் ரோடு, (ரத்தினபுரம் AA ரோடு) மதுரை –11 கதவிலக்கம் கொண்ட இடத்தில் திரு. N.N. நல்லமணி மற்றும் 7 நபர்கள் அருள்மிகு கூடலழகர் பெருமாள் கோவிலுக்கு சொந்தமான சர்வே எண் T.S. எண்.2001/2 – 2005/6 மற்றும் இதர எண்களில் மொத்த பரப்பளவு 84,860 சதுரஅடியை ஆக்கிரமித்து நல்லமணி பஸ் கம்பெனியை நடத்தி வருவதாகவும், அவ்விடத்திற்கு சொத்து வரி மிக குறைவாக செலுத்துவதாகவும், அங்கு பணிபுரியும் தொழிலாளர்களிடம் தொழிலாளர் வரி வசூல் செய்யப்படவில்லையெனவும், அனுமதியின்றி கட்டடம் கட்டப்பட்டு வருவதாகவும், தெரிவித்து, உரிய சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரியுள்ளார்.

இந்நேர்வில் மதுரை மாவட்டம், வார்டு எண்.75, மண்டலம்–03(மத்தியம்), 70, திருப்பரங்குன்றம் ரோடு, நகர சர்வே எண்.T.S. எண்.2001/2, – 2005/6 மற்றும் இதர எண்களில் உள்ள 84, 860 சதுரஅடியை நல்லமணி பஸ்நிறுவனம் ஆக்கிரமிப்பு செய்து உள்ளது என்பதும் எதிர் மனுதாரரின் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள பஸ் நிறுவனத்தில் பணியாற்றும் பணியாளர்களிடமிருந்து தொழில் வரியாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.1250/– வீதம் வசூல் செய்யப்படுகிறது என்பதும் மேற்படி இடம் 1933 ஆம் ஆண்டு நடைமுறையில் இருந்த வருவாய் நகரளவை ஆவணங்களின்படி 1 ஏக்கர் 34848 சதுர அடி பட்டா எண் 478ன்படி வெங்கடேஸ்வரா திருக்கோவில் நந்தவனம் என தாக்கலாகியுள்ளது என மதுரை மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி ஆணையர் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதும் தெரிய வருகிறது. மேலும் மதுரை வருவாய் கோட்டாட்சியரின் 1.10.1956 நாளிட்ட கொடை ஆணை எண்.25/36 மற்றும் TK 8A/74/66 நாள்.10.12.56ன்படியும் நகர புல எண் 2001/1, பரப்பு 4096 சதுர அடி மதுரை முனிசிபல் கவுன்சில் ரோடு எனவும், 2001/2 பரப்பு 1 ஏக்கர் 30752 சதுர அடி லங்கராம் என்பரின் பெயரிலும், உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது எனவும், தற்போதைய நகரளவை வருவாய் ஆவணங்களின்படி சர்வே வார்டு IV பிளாக் 37, பரப்பளவு 6850 சதுர மீட்டர் லங்கராம் மற்றும் 8 நபர்கள் பெயரில் தாக்கலாகியுள்ளது என்பதும் மதுரை மாநகராட்சி மண்டலம்–3 (மத்தியம்) உதவி ஆணையரின் அறிக்கையின் வாயிலாக அறிய முடிகிறது. அனுமதியில்லா கட்டுமானத்தினை நிறுத்த 01.10.2022 அன்று மாநகராட்சியால் நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது எனவும் ஆவணங்கள் மூலம் அறியமுடிகிறது.

விரிவான விசாரணைக்குப்பின் இம்முறைமன்ற நடுவம் இந்நேர்வில் பின்வருமாறு ஆணையிடுகிறது:–

1933ஆம் ஆண்டு நடைமுறையில் இருந்த வருவாய் நகரளவை ஆவணங்களின்படி சர்வே வார்டு IV , 25, நகர் புல எண்.2001ன் பரப்பளவு 1 ஏக்கர் 34848 சதுர அடி, பட்டா எண் 478ன்படி வெங்கடேஸ்வரா கோவில் நந்தவனம் என தாக்கலாகி, எந்த அடிப்படையில் தனியாருக்கு பட்டா வழங்கப்பட்டது என்பது குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட வருவாய் அலுவலர்களின் மீது நடவடிக்கை எடுக்குமாறு, மதுரை மாவட்ட ஆட்சியருக்கு அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது. மேலும், வெங்கடேஸ்வரா திருக்கோவில் நந்தவனம் என்று பழைய ஆவணங்களின்படி தாக்கலாகி பின்பு தனியார்வசம் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்பதையும் கண்டறிந்து அதனை மீட்க உரிய சட்டபூர்வமான தொடர் நடவடிக்கைகளை மதுரை மாவட்ட ஆட்சியருடன் இணைந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இந்து அறநிலையத்துறைக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மதுரை மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் (ம) உதவி ஆணையர் (பொ) ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு நல்லமணி பஸ்நிறுவனத்தில் பணியாற்றும் பணியாளர்களிடமிருந்து குறைவாக தொழில் வரி வசூல் செய்யப்படுவதை, விதிகளின்படி உரிய தொழில் வரியை வசூல் செய்யுமாறும் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இவ்வாறு குறைவாக தொழில் வரி வசூலிக்கப்பட்டதை சம்மந்தப்பட்ட பணியாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யுமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும் அனுமதியில்லா கட்டுமானப்பணியை நிறுத்த 01.10.2022 அன்று மாநகராட்சியின் நோட்டீஸ் வழங்கப்பட்டு அதன்பிறகு கால அவகாசம் முடிவுற்ற நிலையில் எவ்வித தொடர் நடவடிக்கையும் எடுக்காதது கண்டிக்கத்தக்கது. எனவே, உரிய சட்டபூர்வமான தொடர் நடவடிக்கை எடுக்குமாறு மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேற்கண்ட ஆணையின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து இம்முறைமன்றத்திற்கு 2 மாத காலத்திற்குள் அறிக்கையினை அனுப்புமாறு மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

இதில் தனியார் நிறுவனத்துக்கு உடந்தையாய் செயல்பட்ட கள அலுவலர்களைக் கண்டுபிடித்து அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2023-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு இரா. மயில்சாமி,
த/பெ. இராமலிங்கம்,
மனை எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி,
மதுரை – 625 018.

2)மாவட்ட ஆட்சியர்,
மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
முதல் தளம், மதுரை – 625 020.

3)ஆணையர்,
இந்து சமய மற்றும் அறநிலையத்துறை,
உத்தமர் காந்தி ரோடு,
நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.

4)இணை ஆணையர்,
இந்துசமய மற்றும் அறநிலையத்துறை,
மதுரை – 625 001.

5)ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

6)உதவி ஆணையர்,
மண்டலம் – 02 (மத்தியம்)
மதுரை மாநகராட்சி,
மதுரை.

7)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

8)இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

24/1/23
செயலாளருக்காக

24/1/23